<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

முன்னிலை – திரு. எம். விக்னேஷ் பிரபு, எம்.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண். 234/2023**
**CNR.No.TNTM04–000582–2023**

வேண்டா (எ) லட்சுமி . . . வாதி

// எதிர் //

1. மணிமேகலை,
2. ஏழுமலை,
3. திருமலை,
4. பகவான்,
5. தணிகைமலை, . . . பிரதிவாதிகள்

இவ்வழக்கானது செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்தநிலையில் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி உத்தரவிற்கிணங்க விடுவி.எண்.5664/2024 தேதி 30.10.2024 ன் கீழ் கூடுதல் சார்பு நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 13.03.2025ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.மகேந்திரன், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என விளம்புகை செய்தும், அச்சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அல்லது அவரது ஆட்களோ எவ்விதத்திலும் தடை செய்யாமல் இருக்க ஒரு

நிரந்தரதடை உத்திரவு பரிகாரம் வேண்டியும் மற்றும் பிரதிவாதிகள் பேரில் ஏற்படுத்தியுள்ள 20.10.2022 தேதியன்று பெரணமல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2311/2022 முன்னிலைக்கு ஏற்படுத்திய பாகப்பிரிவினை பத்திரம் சட்டப்படி செல்லாது என டிக்ளேர் செய்யும்படிக்கும் வாதியால் இத்தாவா தாக்கல்.

2. **<u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>** ...

தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் அர்ஜுனகவுண்டர் என்பவருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டிருந்தது என்றும், மேற்படி சொத்துக்களை அர்ஜுண கவுண்டர் அவரது மனைவி அம்மாகண்ணு மற்றும் அவரது மகன்களான பொன்னுசாமி, சபாபதி மற்றும் அவரது மகள் பெரிய பாப்பா ஆகியோர்களுடன் கூட்டாக எந்தவித பாகப்பிரிவினையும் ஏற்படுத்திக் கொள்ளாமல் ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும், மேற்படி அர்ஜுண கவுண்டர் அவரது மகளான பெரியபாப்பா என்பவருக்கு அதிக அளவில் நகைகள், சீர்வரிசை பொருட்கள் அளித்து மிக சிறந்த முறையில் திருமணம் செய்து வைத்தார் என்றும், இந்த நிலையில் மேற்படி அர்ஜுண கவுண்டர் கடந்த 1974 ஆம் ஆண்டு தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் குறித்து எந்தவித ஆவணமும் ஏற்படுத்தி வைக்காமல் இன்டஸ்டேட்டாக காலமாகிவிட்டார் என்றும், அவரது காலத்திற்கு முன்பாகவே அவரது மனைவி அம்மாகண்ணு என்பவர் கடந்த 1960 ஆம் ஆண்டு வாக்கில் இறந்துவிட்டார் என்றும், பின்னிட்டு தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் குறித்து மேற்படி அர்ஜுண கவுண்டரின் காலத்திற்கு பிறகு கடந்த 1975ஆம் ஆண்டு வாக்கில் மேற்படி அர்ஜுண கவுண்டரின் மகன்களான மேற்படி பொன்னுசாமி மற்றும் சபாபதி ஆகிய இருவரும் வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றும், அந்தவகையில் தாவா சொத்து மேற்படி சபாபதி என்பவருக்கு பாகமாக கிடைத்தது என்றும், மேற்படி சபாபதி முழு

உரிமையுடன் ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும், இந்நிலையில் மேற்படி சபாபதி என்பவர் அவரது மகளான வாதிக்கு (வேண்டா) தாவா சொத்து குறித்து கடந்த 20.08.2014 தேதியன்று ஒரு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை பெரணமல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1549/2014 முன்னிலைக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவண பத்திரப்படி வாதி கடந்த 9 வருடங்களுக்கு மேலாக எந்தவித இடையூறுமின்றி ஆண்டு அனுபவித்து வருகின்றார் என்றும், இந்தநிலையில் தாவா சொத்திற்கு எந்தவித சம்மந்தமும் இல்லாத பிரதிவாதிகள் கடந்த 04.06.2023ம் தேதியன்று தாவா சொத்தில் அத்துமீறி பிரவேசித்து ஜே.சி.பி இயந்திரம் மற்றும் போர்வெல் இயந்திரங்களை கொண்டு வந்து பிரச்சனை ஏற்படுத்தினார் என்றும், இதனால் வாதி 1 முதல் 5 பிரதிவாதிகளை அணுகி, தாவா சொத்தில் ஏன் வீணான பிரச்சனைகளை ஏற்படுத்துகிறீர்கள் என்று கேட்டதற்கு 2ம் பிரதிவாதி கடந்த 20.10.2022 தேதியன்று தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் குறித்து 1 முதல் 5 பிரதிவாதிகள் இடையே பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக கூறி வீண் பிரச்சனை ஏற்படுத்தினார் என்றும், மேற்சொன்ன பாகப்பிரிவினை பத்திரம் மோசடியானது என்றும், மேலும், வாதி பஞ்சாயத்தார் துணையுடன் தாவா சொத்தில் அத்துமீறி பிரவேசிக்காமல் 1 முதல் 5 பிரதிவாதிகளை தடுத்துவிட்டார் என்றும், தாவா சொத்தில் பிரதிவாதிகள் தொடர்ந்து வாதியின் அனுபவத்தை தடை செய்ய முயன்று வருகிறார்கள் என்றும், பிரதிவாதிகள் பணபலம், படைபலம்மிக்கவர்கள் என்றும், எந்த நேரத்திலும் தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை தடை செய்ய கூடிய அபாயம் உள்ளதால் தாவா சொத்தில் வாதியின் அமைதியான மற்றும் நேர்மையான அனுபவத்தை 1 முதல் 5 பிரதிவாதிகள் எவ்விதத்திலும் தடைசெய்யக் கூடாதெனஒரு நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் பரிகாரம் கோரி தாவா தாக்கலாகியுள்ளது என்றும்,

வாதி கடந்த 04.06.2023 தேதியன்று பெரணமல்லூர் காவல் நிலையத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள் பேரில் புகார் அளித்தார் என்றும், மேற்படி புகாரின் பேரில் பெரணமல்லூர் காவல் நிலையத்தினர் வாதிக்கு சி.எஸ்.ஆர். எண்.225/2023ஐ வழங்கினார்கள் என்றும், மேலும் மேற்படி புகாரின் பேரில் வாதி மற்றும் 2ம் பிரதிவாதியை அழைத்து விசாரணை செய்து 2ம் பிரதிவாதி இனி இதுபோன்ற செயல்களில் ஈடுபட வேண்டார் என்று அறிவுரை கூறி அனுப்பிவிட்டனர் என்றும், எனவே தாவா சொத்து வாதிக்கு மட்டுமே உரிமையானது என டிக்ளேர் செய்ய தக்க உத்திரவிடும்படிக்கும் கோரி வழக்கு தாக்கல் செய்வதாகவும், மேலும் வாதிக்கு வாதியின் தகப்பனார் சபாபதி என்பவர் ஏற்படுத்திய தானசெட்டில்மெண்ட் ஆவணம் கடந்த 20.08.2014 தேதியன்று ஏற்படுத்திய நிலையில் 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாரான பொன்னுசாமி மற்றும் 2ம் பிரதிவாதியும் மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்து, மேற்படி ஆவணத்தை உறுதி செய்துள்ள நிலையில், தாவா சொத்தில் வீண் பிரச்சனை ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதிகள் மோசடியாக தாவாசொத்து குறித்து பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது கண்கூடாக தெரிவதாகவும், தாவாசொத்து குறித்து வருவாய்துறை பட்டாவில் சரியான வருவாாய் துறை ஆவணங்களை பரிசீலனை செய்யாமலும், முறையான விசாரணை செய்யாமலும் 2, 4 பிரதிவாதிகளின் பெயர்களை மேற்படி பட்டாவில் தாவா சொத்து குறித்து 1முதல் 5 பிரதிவாதிகள் பேரில் ஏற்படுத்தியுள்ள 20.10.2022 தேதியன்று பெரணமல்லூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2311/2022 முன்னிலைக்கு ஏற்படுத்திய பாகப்பிரிவினை பத்திரத்தில் வாதி பார்ட்டி இல்லை என்றும், எனவே மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் சட்டப்படி செல்லாத ஒன்றாகும் என்றும், மேலும் 20.10.2022 தேதியில் பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை

பத்திரம் சட்டப்படி செல்லாது என டிக்ளேர் செய்யும்படிக்கும் பரிகாரம் கோரியும் வாதியால் இத்தாவா தாக்கல்.

3. பிரதிவாதிகளுக்கு போதிய வாய்ப்புகள் வழங்கியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கின் தீர்வுக்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்படுகிறது.

1. வழக்கு சொத்தை பொருத்து வாதி வழக்கில் கோரியுள்ள விளம்புகை, மற்றும் நிரந்தரதடையுத்தரவு பரிகாரங்கள் வாதிக்கு அளிக்கத்தக்கதா?

2. வாதிக்கு கிடைக்ககூடிய இதர பரிகாரங்கள் என்ன ?

4. வாதிக தரப்பில் வாதி வேண்டா என்கிற லட்சுமி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவவணங்கள் இல்லை.

5. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு இவ்வழக்கில் வனையப்பட்டுள்ள எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்வு காண்கிறது.

6. வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்து வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் பத்திரப்படிக்கு வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அச்சொத்தினை வாதி அடைந்து அனுபவித்து வருகிறார் என்றும், தாவா சொத்தைப் பொறுத்து எவ்வித உரிமையும் இல்லாத பிரதிவாதிகள் ஏற்படுத்திய வா.சா.ஆ.2 பாகப்பிரிவினைப்பத்திரம் வாதியைப் பொறுத்து செல்லாது மற்றும்

கட்டுப்படுத்தாது என்றும், வாதி வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்களைக் கொண்டு நிரூபித்துள்ளார் என்றும், வாதியின் தாவாவினை அனுமதித்து தாவாப்படி தீர்ப்பாகுமாறு வாதிட்டார்.

**7. 1 மற்றும் 2 எழுவினாக்களுக்கான தீர்வுகள்**

தாவா சொத்தை பொருத்து வாதியின் உரிமையை விளம்புகை செய்தும், அச்சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி பிரவேசித்து வாதியின் அமைதியான அனுபவத்தினை தடைசெய்யாமல் இருக்கும்பொருட்டு ஒரு நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் வேண்டியும், 22.10.2022 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தை செல்லாது என விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் இதர பரிகாரங்களுக்காக வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தாக்கல் செய்துள்ள தாவாவினை நிருபிக்க வேண்டிய பொறுப்பு வாதியைச் சார்ந்ததாகும். வாதி தாக்கல் செய்துள்ள தாவாவினை தகுந்த சாட்சிகள் மற்றும் ஆவணங்களை கொண்டு நிருபித்துள்ளாரா என்று பார்க்கும்போது, வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக முதன்மைசாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் 20.08.2014 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் முன்னிலைக்கு வாதியின் தந்தை சபாபதி 20.08.2014 அன்று தாவா சொத்தினை வாதிக்கு வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார். வாதி தரப்பில் 22.10.2022 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் இணையவழி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் தாவா சொத்தைப் பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் தங்களுக்குள் பாகப்பிரிவினை செய்துக்கொள்வதாக வாசகங்கள்

கண்டு எழுதப்பட்டு அந்த பத்திரமானது பதிவு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுவதற்கு முன்னரே தாவா சொத்தைப் பொறுத்து வாதிக்கு வாதியின் தந்தை 2014ம் ஆண்டிலேயே வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பாத்தியப்படுத்திவிட்ட நிலையில் தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரமானது சட்டப்படி தவறானதாகும். மேலும் வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரமானது வாதியை பொறுத்து கட்டுப்படுத்தாது மற்றும் செல்லாத ஆவணமாகும். மேலும் வாதி தனது தாவாவில் தெரிவித்துள்ள சங்கதிகளை மறுத்து பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யவில்லை. மாறாக போதிய வாய்ப்புகள் வழங்கியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள். தாவா சொத்தானது வாதிக்கு பாத்தியமானது என்பதனையும் சொத்தானது வாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதையும் வாதி வா.சா.1ன் சாட்சியம் மற்றும வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்களைக் கொண்டு நிரூபித்துள்ளார். வாதி தனது தாவாவினை தகுந்த வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவண சாட்சியம் கொண்டு நிரூபித்துள்ளதால் தாவா சொத்தைப் பொறுத்து வாதி கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப்பரிகாரம் வாதிக்கு அளிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் எழுவினா **1**ஐ பொருத்து வாதிக்கு ஆதரவாக தீர்வுகாண்கிறது.

8. எழுவினா 1–ஐ பொருத்து வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ளதால், வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு அளிக்கத்தக்கதல்ல என்று எழுவினா 2–ஐ பொருத்து இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக, வாதியின் இத்தாவாவனது செலவுத்தொகையின்றி

அனுமதித்து தாவா சொத்தில் வாதியின் உரிமையை விளம்புகை செய்தும், அச்சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ அத்துமீறி பிரவேசித்து தடைசெய்யாமல் இருக்கும்பொருட்டு ஒரு நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் வழங்கியும், 22.10.2022 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் வாதியை பொறுத்து செல்லாது என்று விளம்புகை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–(எம்.விக்னேஷ் பிரபு)
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு

<u>வாதி தரப்பு சாட்சிகள்</u> :
வா.சா.1 – திருமதி.வேண்டா க/பெ.ஏழுமலை

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | | |
|---|---|---|
| வா.சா–ஆ.1 | 20.08.2014 | வாதியின் தந்தை சபாபதி எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் |
| வா.சா–ஆ.2 | 20.10.2022 | பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினைப்பத்திரம் இணையவழி நகல் |
| வா.சா–ஆ.3 | – | கணினி பட்டா |
| வா.சா.ஆ.4 | – | வில்லங்க சான்றிதழ் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்</u> : இல்லை

ஒம்/–(எம்.விக்னேஷ் பிரபு)
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு